| F–7800 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA1C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**First Semester**

**தமிழ்**

இக்கால இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                    ($10 \times 2 = 20$)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. ‘பாரதியார்’- குறிப்பு வரைக.

2. கண்ணதாசனின் படைப்புகள் நான்கினை எழுதுக.

3. ‘இன்குலாப்’ எழுத்துக்கள் உணர்த்தும் பொருண்மை இரண்டினை எழுதுக.

4. நா. முத்துக்குமாரின் கவிதைகள் எவற்றை மையமிட்டவை?

5. வண்ணதாசனின், ‘ஒரு சிறு ஓசை’ கதையின் தலைப்புப் பொருத்தம் பற்றி எழுதுக.

6. ‘சிறுகதை’ எவ்வாறு இருக்க வேண்டும்?

7. ‘அகல்விளக்கு’- புதினத்தில் அருளப்பர் கூறிய அறிவுரை யாது?

8. ‘அகல்விளக்கு’-புதினத்தின் மையக்கருத்தினை எழுதுக.

9. இராசராச சோழன் குறித்தெழுதுக.

10. திலகவதியாரின் தொண்டு பற்றி எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சேரனின் அவை நிகழ்வினைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதியின் 'கண்ணம்மா' கவிதையின் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

12. (அ) 'பூநுகரும் காலம்' கவிதை உணர்த்தும் செய்தியை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'நா. முத்துக்குமார்'- குறிப்பு வரைக.

13. (அ) 'பொழுது போகாமல் ஒரு சதுரங்கம்'-கதையில் இடம்பெறும் தலைமைப்பாத்திரப் பண்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'அந்தப் பன்னீர் மரம் இப்போது இல்லை' - கதையைத் திறனாய்க.

14. (அ) 'மு. வரதராசனார்'- குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) 'அகல்விளக்கு'-புதினத்தின் தலைப்புப் பொருத்தம் பற்றி விளக்கி எழுதுக.

15. (அ) லெனின் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'அன்னை தெரசாவின் புனிதவாழ்வைப் போற்றுவோம்' எனும் கட்டுரை உணர்த்தும் செய்திகளை எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ‘புறாக்கள்’ குறித்துப் பாரதிதாசன் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

17. ‘சூரியனைச் சுமப்பவர்கள்’ வழியாக இன்குலாப் உணர்த்தும் கருத்துக்களை ஆய்ந்தெழுதுக.

18. ‘சந்தனம்’ சிறுகதையின் பாத்திரப்படைப்புகள் குறித்து விவரிக்க.

19. ‘அகல்விளக்கு’- புதினத்தின் சமுதாயச் சிந்தனைகள் குறித்துக் கட்டுரைக்க.

20. ‘வீரமருது சகோதரர்கள்’ குறித்துத் தொகுத்தெழுதுக.

———————

**F–7801**

| Sub. Code |
|---|
| **7BTA1C2** |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**First Semester**

**தமிழ்**

**இலக்கணம் - நன்னூல் - எழுத்து**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நன்னூலின் ஆசிரியர் யார்?

2. நன்னூல் குறிப்பிடும் குற்றங்கள் எத்தனை?

3. எழுத்தின் வகைகளை நன்னூல் எத்தனை வகைப்படுத்துகிறது?

4. இனஎழுத்து என்றால் என்ன?

5. பதம் என்றால் என்ன?

6. நிகழ்கால இடைநிலைகள் எவை?

7. மூன்று காலங்கள் யாவை?

8. ‘உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ - விளக்குக.

9. பொன் + ஒளி $\rightarrow$ பொன்னொளி விதியாக?

10. ‘குயின்’ எனும் சொல்லுடன் வல்லினம் வந்து புணர்ந்தால் என்னாகும்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) உரையினது பொது இலக்கணம் யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) நூலின் வகைகளை விளக்குக.

12. (அ) மாத்திரை என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) போலி என்றால் என்ன? விளக்குக.

13. (அ) புணர்ச்சி என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) காலம் காட்டும் விகுதிகள் யாவை?

14. (அ) ஆகார விற்றுக்கு உரிய புணரியல் விதி கூறுக.

(அல்லது)

(ஆ) 'பனைக் கொடி', 'பனங்காய்' - புணர்ச்சி விதி கூறுக.

15. (அ) மகரவிற்றுப் புணர்ச்சி பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சாரியைகள் பற்றி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் <u>மூன்றனுக்குக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.

16. மாணாக்கர், மாணாக்கர் அல்லாதார் இலக்கணம் குறித்து விளக்குக.

17. நன்னூல் குறிப்பிடும் சார்பெழுத்துக்கள் பற்றி விளக்குக.

18. வேற்றுமைப் புணர்ச்சி குறித்து எழுதுக.

19. ஒன்பது மற்றும் பத்து புணரும் தன்மையை விளக்குக.

20. உருபுப்புணரியல் குறித்து எழுதுக.

---

F–7802

Sub. Code
7BTA2C1

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Second Semester**

**தமிழ்**

பக்தி இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. கோளறு பதிகம் யாரால் பாடப்பட்டது?

2. திருவையாறு பதிகம் பாடப்பட்டதன் காரணம் குறித்து எழுதுக.

3. ஏழாம் திருமுறையைப் பாடியவர் யார்?

4. மாணிக்கவாசகர் யாருடைய அவையில் அமைச்சராக இருந்தார்?

5. பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?

6. 'கண்ணன் பிள்ளைத் தமிழைப்' பாடியவர் யார்?

7. ஆண்டாளின் இயற்பெயர் என்ன?

8. இரட்சண்ய யாத்திரிகம் எந்த நூலைத் தழுவி எழுதப்பட்டது?

9. தாயுமானவர் சிறு குறிப்பு வரைக.

10. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கோளறு பதிகப் பாடற்கருத்துக்களை தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) சிவனின் தோற்றப் பொலிவினை நாவுக்கரசர் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?

12. (அ) திருத்தொண்டத்.தொகையில் இடம்பெறும் அடியார்களின் சிறப்புக்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) திருப்பள்ளியெழுச்சியில் மாணிக்கவாசகர் கூறும் காலை நேர வருணனையை விளக்குக.

13. (அ) பாவை நோன்பின் சிறப்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) பெரியாழ்வார் கண்ணனை எவ்வாறெல்லாம் தாலாட்டுகிறார்?

14. (அ) உலகம் மகிழ்ந்து ஈடேற எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை கூறும் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) குணங்குடியார் பராபரக்கண்ணியில் இறைத்தன்மையை எவ்வாறெல்லாம் எடுத்துரைக்கிறார்?

15. (அ) இராமலிங்க வள்ளலாரின் இறைநெறியை விளக்குக.

(அல்லது)

(ஆ) தாயுமானவர் இறைவனை வேண்டும் விதம் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்குக் <u>கட்டுரை</u> வடிவில் விடையளிக்க.

16. திருஞான சம்பந்தரின் பக்தித் திறத்தை விவரி.

17. அடியார்க்கு தொண்டு செய்தலே சிவத்தொண்டு என்ற கூற்றை சுந்தரர் பாடல்கள் வழி நிறுவுக.

18. கண்ணன்மேல் கொண்ட பக்தியை ஆண்டாள் வெளிப்படுத்தும் விதத்தினை கட்டுரை வரைக.

19. உடலிலே உயிராய் இறைத்தன்மை கலந்திட இறைவனை வேண்டும் விதத்தினை தொகுத்துரைக்க.

20. தாயுமானவர், குணங்குடி மஸ்தான் சாகிபு - இருவரையும் ஒப்பிடு.

| F–7803 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA2C2 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Second Semester**

**தமிழ்**

**இலக்கணம் - நன்னூல் - சொல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. இடம் எத்தனை வகைப்படும்?

2. ஆகுபெயர் என்றால் என்ன?

3. வேற்றுமை எத்தனை?

4. உருபு மயக்கம் என்றால் என்ன?

5. உயர்திணை ஆண்பாற் படர்க்கை வினைமுற்றுக்கள் எவை?

6. வாழ்க - இலக்கணக் குறிப்பு தருக.

7. பண்புத் தொகை என்றால் என்ன? சான்று தருக.

8. விடை எத்தனை வகைப்படும்?

9. ஏகார இடைச் சொல்லின் பொருண்மைகள் யாவை?

10. மூவறிவு உயிர்கள் எவை?

### பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மூவகை மொழிகளை விளக்கிச் சான்று தருக.

(அல்லது)

(ஆ) இருதிணைப்பொதுப் பெயரை விளக்குக.

12. (அ) விளி வேற்றுமையை விளக்குக.

(அல்லது)

(ஆ) விளி உருபு ஏலாப் பெயர்கள் யாவை?

13. (அ) பாற் பொது வினை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெயரெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

14. (அ) பொருள்கோள் என்றால் என்ன? அடிமறி மாற்றுப் பொருள்கோளை விளக்கிச் சான்று தருக.

(அல்லது)

(ஆ) தொகாநிலைத் தொடர் என்றால் என்ன? விளக்குக.

15. (அ) எண்ணிடைச் சொல் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒரு குணம் தழுவிய உரிச்சொல் குறித்து எழுதுக.

### பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்றனுக்குக்** <u>கட்டுரை வடிவில்</u> விடை எழுதுக.

16. திணை, பால், எண் பற்றிய நன்னூல் கருத்துக்களை விளக்குக.

17. வேற்றுமையின் வகைகளை விளக்குக.

18. வினையெச்ச வாய்பாடுகளை விளக்கிச் சான்று தருக.

19. வினாவின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

20. நன்னூலாரின் இடைச்சொல் கொள்கையை விளக்குக.

---

| F–7804 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA2C3 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Second Semester**

தமிழ்

தமிழக வரலாறும் பண்பாடும்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

பகுதி அ                                        $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. தமிழகத்தின் தென் எல்லை எது?

2. பாலக்காட்டுக் கணவாய் எம்மலைத் தொடரில் உள்ளது?

3. சங்கம் எந்த ஊரில் இருந்தது?

4. கலிங்கம் என்றால் என்ன?

5. சைவசமய அடியார்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

6. கடாரம் கொண்டான் யார்?

7. மதுரையின் மீது படையெடுத்த இசுலாமிய தளபதி யார்?

8. பாண்டியர் காலக் குறுநில மன்னர்கள் இருவரைக் குறிப்பிடுக.

9. சிப்பாய்க் கலகம் நடந்த ஆண்டு எது?

10. தமிழகத்தில் புதைபொருள் ஆய்வுநடந்த இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இந்தியாவிற்கு வந்த அயல்நாட்டுப் பயணிகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) குமரிக் கண்டம் - குறிப்பு வரைக.

12. (அ) ஆற்றுப்படை நூல்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்ககாலத் துறைமுகங்கள் பற்றி எழுதுக.

13. (அ) களப்பிரர்கள் - யார்?

(அல்லது)

(ஆ) மகேந்திர பல்லவரின் வெற்றிச் சிறப்புகளை விளக்குக.

14. (அ) திருமலை நாயக்கர் பற்றிச் சுருக்கி வரைக்க.

(அல்லது)

(ஆ) மார்கோபோலா - குறிப்பு வரைக.

15. (அ) இந்தியாவை ஆண்ட ஐரோப்பியர்கள் யார்? யார்?

(அல்லது)

(ஆ) கப்பலோட்டிய தமிழர் யார்? அவரது தேசத் தொண்டு பற்றி விளக்குக.

பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வணிகத் தொடர்பு குறித்து எழுதுக.

17. பண்டைத் தமிழரின் வாழ்க்கை முறைகள் பற்றி எழுதுக.

18. பல்லவர் காலக் கலைச் சிறப்பு குறித்து எழுதுக.

19. பாண்டியர்கள் பற்றிக் கட்டுரைக்க.

20. இருபதாம் நூற்றாண்டுத் தமிழகம் பற்றிக் கட்டுரைக்க.

———————

| F–7805 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA3C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Third Semester**

தமிழ்

சிற்றிலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் ஆசிரியர் யார்?

2. வருகைப் பருவம் எத்தனையாவது பருவம்?

3. அபிராமி அந்தாதி எத்தலத்தின் பதிகம்?

4. விழித்துணையாக அபிராமி பட்டர் யாரைப் போற்றுகிறார்?

5. 'இருந்தமிழே! உன்னால் இருந்தேன்' – யார் கூற்று?

6. கலிங்கத்துப் பரணி நூலின் ஆசிரியர் யார்?

7. பள்ளு நூலின் இலக்கணம் யாது?

8. குற்றால நாதர் மீது காதல் கொண்ட தலைவி யார்?

9. 'கலம்பகம்' – விளக்கம் எழுதுக.

10. குலோத்துங்க சோழனின் சிறப்புப் பெயர்கள் எவை?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) மலயத்துவகன் பெற்ற பெருவாழ்வு எது? அதன் சிறப்புக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பிள்ளைத் தமிழ் இலக்கிய வகை பற்றி விளக்குக.

12. (அ) அந்தாதி இலக்கியம் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) அபிராமி அந்தாதியில் அம்மையின் பெருமைகள் எங்ஙனம் எடுத்துரைக்கப்படுகின்றன?

13. (அ) பரணி காட்டும் 'காடு' பற்றிய காட்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் மொழி பிறந்து வளர்ந்த முறைமையை எழுதுக.

14. (அ) பள்ளு நூலின் இலக்கணம் – உரைக்க.

(அல்லது)

(ஆ) சிங்கன் – சிங்கி உரையாடலை எழுதுக.

15. (அ) குலோத்துங்களின் முன்னோர் சிறப்புக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'நந்திவர்மன்' எந்த வமிசத்து மன்னன்?

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நிலவோடு மீனாட்சியம்மையைக் குமர குருபரர் எங்ஙனம் தொடர்புபடுத்துகிறார்? விளக்குக.

17. அம்மையின் சிறப்புக்களைப் பட்டர் எவ்விதம் எடுத்துரைக்கிறார்?

18. தூது இலக்கிய அமைப்பினைத் தமிழ் விடுதூது நூலில் பொருத்தி ஆய்க.

19. முக்கூடற் பள்ளு காட்டும் நாட்டு வளத்தினை விளக்குக.

20. குலோத்துங்கச் சோழனின் சிறப்புக்களை எழுதுக.

———————

F–7806

Sub. Code
7BTA3C2

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Third Semester**

தமிழ்

**நம்பியகப்பொருள்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. ஒரு தலைக் காமம் எவ்வாறு சுட்டப்படுகிறது?

2. ஓதல் பிரிவுக்கு உரிய காலம் யாது?

3. இயற்கைப் புணர்ச்சி என்றால் என்ன?

4. ஒருவழித் தணத்தலில் எத்தனை வகைகள்?

5. விரைவிற்கு உரிய கிளவித் தொகைகள் எத்தனை?

6. பொருள்வயிற் பிரிவு என்றால் என்ன?

7. காலம் எத்தனை வகைப்படும்?

8. முன்னம் என்றால் என்ன?

9. இறைச்சிப் பொருள் என்றால் என்ன?

10. எச்சத்தின் வகைகள் யாவை?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) குறிஞ்சியின் கருப்பொருளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) அறத்தொடு நிற்றலை விளக்குக.

12. (அ) வன்புறையின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) வரைவு கடாவுதலை விளக்குக.

13. (அ) மீட்சியின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கற்பிக்கு உரிய கிளவித் தொகைகளை விளக்குக.

14. (அ) அகப்பாட்டு உறுப்புக்கள் எத்தனை? பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) களவில் கூற்றிற்கு உரியவர் யார்?

15. (அ) அகப்பாட்டுத் தலைமக்களுக்குக் கூறப்படும் பெயர்கள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) 'அகப்புறப் பாட்டும் இகப்பில அவையே' - விளக்குக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஊடல் தவிர்க்கும் வாயில்கள் யாவை? அவர்களின் செயல்களை விளக்குக.

17. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவினை விளக்குக.

18. கற்பொடு புணர்ந்த கவ்வை என்றால் என்ன? விளக்குக.

19. ஒழிபியல் குறிப்பிடும் கூற்று பற்றிய செய்திகளைத் தருக.

20. அகப்பாட்டினுள் தலைமக்கள் எவ்வாறு இடம்பெறுகின்றார் என்பதனை விளக்குக.

———————

| F–7807 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA4C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022.**

**Fourth Semester**

**தமிழ்**

**காப்பிய இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. நிலமகளின் தோற்றத்தைச் சுட்டுக.

2. மணிமேகலையை இயற்றிய ஆசிரியர் பெயர் என்ன?

3. வேடனின் தோற்றத்தைச் சீவகசிந்தாமணி வழிச்சுட்டுக.

4. சந்திராப நகரின் அழகினை எடுத்துக்காட்டுக.

5. குகன் என்பவன் யார்?

6. குகன் வேடர்களுக்கு இட்ட கட்டளை யாது?

7. சிறுத்தொண்டர் கற்ற கலைகளைக் குறிப்பிடுக.

8. பெரியபுராணத்தின் ஆசிரியர் யார்?

9. 'சீறா' என்பதன் பொருள் யாது?

10. 'மகனேர்தல்' என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) 'மருவூர்ப்பாக்கம்' – சிறு குறிப்புத் தருக.

(அல்லது)

(ஆ) தேவராட்டி கூறிய செய்திகளை விளக்குக.

12. (அ) சுதஞ்சணன் சீவகனுக்குக் கூறிய நெறிகளின் இயல்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) பதுமை முல்லைக் கொடியை எங்ஙனம் வளர்த்தாள்? அதில் தங்கிய பாம்பு அவளை எவ்விதம் தீண்டியது?

13. (அ) குகனின் தோற்றச் சிறப்பை விவரி.

(அல்லது)

(ஆ) தன் இனத்தவரான வேடரிடம் குகன் கூறிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

14. (அ) சிறுத்தொண்டர் – சிறு குறிப்புத் தருக.

(அல்லது)

(ஆ) சிறுத்தொண்டர் அடியவர்களை உபசரித்த முறையை விளக்குக.

15. (அ) வணிகர்கள் கடந்து சென்ற நிலங்களின் இயல்புகளைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) சூசை கடந்து சென்ற முல்லைநிலக் காட்சிகளை எடுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. ஆபுத்திரனின் திறம் குறித்து மணிமேகலை வழி எடுத்துரைக்க.

17. பாம்பு தீண்டப்பட்ட பதுமையாருக்கு சீவகன் எங்ஙனம் விஷத்தை நீக்கினான்? கட்டுரைக்க.

18. பரதனைக் கண்ட குகனின் நிலையினைக் கட்டுரைக்க.

19. மகனையே அமுது படைத்த சிறுத்தொண்டரின் பக்தியை விளக்குக.

20. கதீஜாவின் கனவின் திறத்தை விவரி.

| F–7808 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA4C2 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fourth Semester**

**தமிழ்**

**இலக்கணம் – புறப்பொருள்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

**பகுதி அ**    (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. பூசல் மாற்று என்றால் என்ன?
2. ஆநிரைகளை மீட்கும் திணையின் இலக்கணத்தைக் கூறுக.
3. வஞ்சித்திணை – சிறு குறிப்பு வரைக.
4. குடை செலவு என்றால் என்ன?
5. மதில் காக்கும் திணையையும் அவர்கள் சூடும் பூவினையும் எழுதுக.
6. உழிஞைத்திணையின் துறைகள் எத்தனை வகைப்படும்?
7. தும்பைப்போரினை குறிப்பிடுக.
8. பாலைக்குப் புறம்பான திணையையும் அதன் வகையையும் கூறுக.
9. பாடாண் திணை – விளக்கம் தருக.
10. கூத்தராற்றுப்படைக்கான இலக்கணத்தைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கரந்தைப் படலத்தின் திணை, துறையின் வகைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஆளெறி பிள்ளை, பிள்ளைத் தெளிவு, பிள்ளையாட்டு – துறைகளை நூற்பா தந்து விளக்குக.

12. (அ) மண்ணாசைப் போரின் திணையையும் அதன் துறைவகைகளையும் கூறுக.

(அல்லது)

(ஆ) பேராண் வஞ்சித் துறையின் வகைகளை சான்றுடன் தருக.

13. (அ) குற்றுழிஞையின் வகைகளை நூற்பா தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வாள் மண்ணுநிலை, மண்ணு மங்கலத்துறைகளை விளக்குக.

14. (அ) பாகைப் படலத்தின் துறைகளை வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) அரசமுல்லை, பார்ப்பன முல்லைத் துறைகளை எடுத்துரைக்கவும்.

15. (அ) இயன்மொழி வாழ்த்து, கண்படைநிலை – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) கந்தழி, வள்ளித் துறைகள் – குறிப்பு வரைக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. ஆநிரை கவர்தல் திணையினையும் அதன் துறைகளையும் எடுத்துக்காட்டுடன் விவரி.

17. காஞ்சிப் படலத்தின் துறை வகைகளை தொகுத்துரைக்க.

18. எயில் காத்தல் திணையின் துறைகளை விரிவாக எழுதுக.

19. வலிமைப் போரினை நூற்பா தந்து விளக்குக.

20. பாடாண் திணையிலுள்ள ஆற்றுப்படைத் துறைச் செய்திகளை தொகுத்தெழுதுக.

| F–7809 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA5C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

**தமிழ்**

அற இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. யாருடைய நட்பு படிக்கப்படிக்க இன்பம் தரும் நூல் போன்றது.

2. கொடுத்தும் கொளல் வேண்டிய நட்புக்குரியவர்கள் யார்?

3. வாணிபத்தை முடித்து துறைமுகம் சேர்ந்த கப்பலைப் போன்று இன்பத்தை அனுபவிப்பவர்கள் யார்?

4. ‘கடல் சார்ந்தும் இன்நீர் பிறக்கும் மலை சார்ந்தும் உப்பு ஈண்டு உவரி பிறத்தலால்’- விளக்குக.

5. ‘முதுமொழிக் காஞ்சி’ - பெயர்க்காரணம் கூறுக.

6. சிறுபஞ்சமூலம் - பெயர்க்காரணம் தருக.

7. வெற்றிவேற்கையின் ஆசிரியர் யார்?

8. எழுத்தறிவித்தவன் யாராகக் கருதப்படுகிறான்?

9. இமனின் உயிரைக் குடித்தற்குக் காரணமாயிருந்த சிறுவன் யார்?

10. நன்னெறியின் ஆசிரியார் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) பெரியாரைத் துணைக்கோடலின் அவசியத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஒருவற்கு கூடாநடவினால் ஏற்படும் தீமைகளை விளக்குக.

12. (அ) ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) தீ நட்பினால் ஏற்படும் அல்லல்களை வள்ளுவர் வழி ஆய்க.

13. (அ) சிறந்த பத்து உணர்த்தும் அறக்கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) மூதுரை தரும் அறநெறிகளை விளக்குக.

14. (அ) வெற்றிவேற்கை குறிப்பிடும் அழகுகளில் ஐந்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) யானையின் செயல்பாட்டினை வெற்றிவேற்கை வழி எடுத்துரைக்க.

15. (அ) நன்னெறி குறிப்பிடும் அறநெறிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'எந்நிலத்து வித்து இடினும்', 'வேம்பின் இழையுள் கனியினும்'- எனத்தொடங்கும் பாடல்களை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நட்பிற்கு இலக்கணம் கூறி நட்பினால் ஏற்படும் நன்மைகளைக் குறள்வழிக் கட்டுரைக்க.

17. சிறுபஞ்சமூலம் உணர்த்தும் அறநெறிகளைத் தொகுத்தெழுதுக.

18. அறிவுடைமை என்னும் அதிகாரம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகளைத் தொகுத்தளிக்க.

19. நீதி நூல்கள் உணர்த்தும் அறநெறிகளை விளக்கிக் கட்டுரைக்க.

20. நீதிநெறி விளக்கம் குறிப்பிடும் வாழ்வியல் அறங்களைக் கட்டுரைக்க.

———————

| F–7810 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA5C2 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

தமிழ்

இலக்கணம் – யாப்பு – யாப்பருங்கலக்காரிகை

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. இயற்சீர் என்றால் என்ன?

2. குறளடி என்பது யாது?

3. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்?

4. நெடிலடி எவ்வாறு வரும்?

5. 'குறள் வெண்பா' - விளக்கம் தருக.

6. அகவல் ஓசையின் வகைகளைக் குறிப்பிடுக.

7. கலித்தாழிசை என்றால் என்ன?

8. வஞ்சிப்பாவின் இனங்கள் யாவை?

9. வனப்பு எத்தனை வகைப்படும்? அவை யாவை?

10. தொன்மை என்பது யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11\. (அ) அசைக்கு உறுப்பாவன யாவை?

(அல்லது)

(ஆ) குற்றியலிகரம், குற்றியலுகரத்தைச் சான்றுகளுடன் விளக்குக.

12\. (அ) தளை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

(அல்லது)

(ஆ) செந்தொடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

13\. (அ) கலிவெண்பா, வெண்கலிப்பா இவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டினை எழுதுக.

(அல்லது)

(ஆ) நேரொன்றிய ஆசிரியத்தளை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

14\. (அ) செப்பலோசை பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐகாரக்குறுக்கம் என்றால் என்ன? அதன் தனித்தன்மையைப் புலப்படுத்துக.

15\. (அ) அலகு பெறாதும் மாத்திரையில் குறைந்தும் வரும் எழுத்துக்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) அடி வகைகளை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை அளவில் விடையளிக்க.

16. சீர்கள் குறித்து கட்டுரை எழுதுக.

17. தொடை விகற்பங்களைச் சான்றுகளுடன் நிறுவுக.

18. ஆசிரியப்பா இலக்கணம் தந்து அதன் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

19. வஞ்சிப்பா குறித்து எழுதுக.

20. தளை வகைகளை விளக்கி எழுதுக.

———————

| F–7811 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA5C3 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

தமிழ்

தமிழ் இலக்கிய வரலாறு

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க :

1. தமிழிலிருந்து தோன்றிய கிளைமொழிகள் யாவை?

2. திருந்தா மொழிகள் யாவை?

3. எட்டுத்தொகையில் பாவால் பெயர்பெற்ற இரு நூல்களைக் குறிப்பிடுக.

4. சிறுபஞ்சமூலம் பெயர்க்காரணம் தருக.

5. தேவார மூவர் யாவர்?

6. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி பெயர்க்காரணம் கூறு.

7. ஆற்றுப்படை என்றால் என்ன?

8. குண்டலகேசி காப்பியம் எச்சமயத்தைச் சார்ந்தது?

9. தனித்தமிழ் நடையின் தந்தை யார்?

10. தமிழ்ச் சிறுகதை மன்னன் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திராவிட மொழிக்குடும்பங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'தமிழ் திராவிட மொழியினங்களின் தாய்' என்பதனை நிறுவுக.

12. (அ) கலித்தொகையின் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) திருக்குறளின் அமைப்பும் பகுப்பும் குறித்து எழுதுக.

13. (அ) காரைக்காலம்மையாரின் பக்திச்சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆண்டாளின் பக்தித்திறத்தினை வெளிப்படுத்துக.

14. (அ) சிற்றிலக்கியத்தில் தூது இடம்பெறுமாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளைக் குறிப்பிடுக.

15. (அ) புதுக்கவிதையின் இலக்கணத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) நொண்டி நாடகம் குறித்து விவரிக்க.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தமிழ்ச் செவ்விலக்கியங்கள் குறித்து கட்டுரை வரைக.

17. சங்க இலக்கியம் சிறப்புகளை விவரித்து எழுதுக.

18. ஐம்பெருங்காப்பியங்கள் குறித்து கட்டுரை எழுதுக.

19. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்தெழுதுக.

20. கிறித்தவர்களின் தமிழ்த்தொண்டினை விவரிக்க.

———————

| F–7812 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTAE1A |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

**தமிழ்**

விருப்பப்பாடம் : மனித உரிமைகள்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. மனித உரிமைகள் என்றால் என்ன?

2. பிரெஞ்சுப் புரட்சியின் கோட்பாடு யாது?

3. அரசியல் சட்டப்பிரிவு 19(1) ன் கீழ் வழங்கப்படும் இரு உரிமைகளைக் கூறுக.

4. கொத்தடிமைக் குற்றம் என்பது யாது?

5. மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?

6. மாநில மனித உரிமை ஆணையத்தின் தலைவர் யார்?

7. தடாச்சட்டப் பிரிவினையை எழுதுக.

8. கைது என்பது யாது?

9. வாரண்டுகளின் வகைகள் யாவை?

10. பிணை என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) உரிமைகளின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கல்வியுரிமை குறித்து எழுதுக.

12. (அ) இந்திய குடிமக்களுக்கான உரிமைப்பேறுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) குடிமக்களுக்குரிய அடிப்படைக் கடமைகளை விளக்குக.

13. (அ) தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் யாவர்?

(அல்லது)

(ஆ) மனித உரிமை ஆணையத்திற்கு உள்ள அதிகாரங்களை விளக்குக.

14. (அ) தேசிய மனித உரிமை ஆணையத்தின் முதல் நடவடிக்கையினை எழுதுக.

(அல்லது)

(ஆ) சிறைத்துறைச் சீரமைப்பில் மனித உரிமை ஆணையத்தின் பங்கினை கூறுக.

15. (அ) கைது செய்யப்படும் போது போடப்படும் சோதனை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பெயில் நிபந்தனைகளை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்குக் <u>கட்டுரை</u> வடிவில் விடையளிக்க.

16. குடியுரிமை, அரசியல் உரிமைக் கோட்பாடுகளை விவரிக்க.

17. இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகளை குறித்து கட்டுரை எழுதுக.

18. மாநில மனித உரிமை ஆணையத்தின் அமைப்பும் செயல்பாடுகளும் குறித்து விரித்துரைக்க.

19. மனித உரிமை மீறல்களைப் போக்க ஆணையம் எடுத்த நடவடிக்கைகளை விளக்கி எழுதுக.

20. கைதிகளுக்கான உரிமைகளை விவரிக்க.

**F–7813**

**Sub. Code**
**7BTAE1B**

## B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022

**Fifth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் : பெண்ணியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                    $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. ஐக்கிய நாடுகள் சபை அறிவித்த அனைத்துலக மகளிர் ஆண்டினைக் குறிப்பிடுக.

2. 'பெண்ணுக்கு ஆடவனே' உலகம் என்று கூறும் நூல் எது?

3. பெண்ணிய வாதிகள் வன்முறைகளாக எவற்றைக் கருதுகின்றனர்?

4. பெண்களுக்கென நிறுவப்பட்டு தனித்தன்மையுடன் விளக்கும் பல்கலைக்கழகம் எது?

5. அனைத்துலக மகளிர் தொழில் நுட்ப மையம் எங்குள்ளது?

6. சிலம்பு கழி நோன்பு - குறிப்புத் தருக.

7. பெண் எழுத்தாளர்கள் இருவர் பெயரினைக் கூறுக.

8. 'திருமா பத்தினி' யார்? பொருள் தருக.

9. சல்மாவின் முதல் கவிதை தொகுப்பு யாது?

10. பத்தினிப் பெண்டிர் எழுவர் பற்றிக் குறிப்பிடும் காப்பியம் எது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) இருபதாம் நூற்றாண்டு பெண்கள் நிலையினை எழுதுக.

(அல்லது)

(ஆ) மிதவாதப் பெண்ணியம் குறித்து எழுதுக.

12. (அ) பெண் மீதான வன்முறைக் கோட்பாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பெண்ணின் பருவநிலைகள் மனநிலையைப் பாதிப்புக்கு உள்ளாக்கும் விளக்குக.

13. (அ) மகளிர் மன்றங்கள், குழுக்களின் செயல்பாடுகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) முகமதியர்களின் திருமணச் சட்டம் பற்றிக் குறிப்பிடுக.

14. (அ) சங்க இலக்கியத்தில் பாட்டி எனும் சொல்லாட்சி வந்தமையை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியம் வரையறுக்கும் பெண்ணின் உரிமைகள் யாவை?

15. (அ) சங்க இலக்கிய பெண் கவிஞர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மாதவி, மணிமேகலை இருவரும் கணிகையர் குலப்பெண்களின் விழிப்புணர்ச்சிக்கு வித்திடுகின்றனர் என்பதனை ஆராய்க.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை எழுதுக.

16. பெண்ணியத்தின் புதிய பார்வை குறித்து கட்டுரை வரைக.

17. பெண் சிசுவதை பற்றி விளக்கி எழுதுக.

18. மகளிர் மேம்பாட்டிற்கு உதவும் கல்விநிலையினை எழுதுக.

19. விடுதலைப்போரில் பங்கு கொண்ட வீரமகளிர் குறித்து எழுதுக.

20. தொல்காப்பியரின் கற்பியல் கொள்கைகளை விவரிக்க.

F–7814

Sub. Code
7BTAE2A

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – கவின் கலைகள்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. நகரம் என்பது என்ன?

2. அழகுக்கலைகள் எத்தனை? அவை யாவை?

3. பிரதிமை உருவங்கள் எவ்வாறு அமைக்கப்பெறும்?

4. புனையா ஓவியம் என்றால் என்ன?

5. தண்ணுமை என்பது யாது?

6. இசை பிறக்கும் இடங்கள் யாவை?

7. 'தலைக்கோலி' பட்டம் யாருக்கு வழங்கப்படும்?

8. 'பாடல் வென்றி' – குறிப்புத் தருக.

9. இலக்கியக் கலையின் இரு வகைகள் யாவை?

10. சங்க காலத்தில் இயற்றப்பட்ட இரு காப்பியங்களைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கோயில்களின் தரையமைப்பு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) குகைக்கோயில்கள் பற்றி எழுதுக.

12. (அ) சிற்பம் அமைக்கும் பொருள்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சிற்பத்தின் மறைபொருளை விளக்குக.

13. (அ) சமணரும், இசைக்கலையும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இராகங்கள் பற்றி எழுதுக.

14. (அ) பண்டைக் காலத்தில் அரசர்கள் இசைக் கலைஞர்களை எவ்வாறு போற்றினர்?

(அல்லது)

(ஆ) பரத நாட்டியக் கலையின் சிறப்புகளை எழுதுக.

15. (அ) தேவாரத்தில் காவியக்கலை எவ்வாறு வெளிப்படுகிறது?

(அல்லது)

(ஆ) தமிழ் இலக்கியப் பிரிவுகளை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. அழகுக்கலைகளில் முதலாவதான கட்டடக்கலை குறித்து ஆராய்க.

17. ஓவியக்கலை குறித்து விரித்துரைக்க.

18. இசைக் கருவிகளின் சிறப்பு மற்றும் பயன்களை விவரிக்க.

19. பதினோரு வகை ஆடல்களை விரித்துரைக்க.

20. ‘காவியக்கலை அழகுக்கலைகளில் நுட்பமானது’ எனும் கூற்றை ஆராய்க.

———————

| F–7815 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTAE2B |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Fifth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் - தன்மேம்பாட்டியல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நீ அசாதாரணமானவன் நூலின் ஆசிரியர் யார்?

2. நீ அசாதாரணமானவன் நூல் எவ்வகையைச் சார்ந்தது?

3. ‘பானை பேசுகிறது’ கவிதையின் ஆசிரியர் யார்?

4. வாழும்போதே வானைத்தொடு நூலின் ஆசிரியர் யார்?

5. பெரியபுராணம் நூலை எழுதியவர் யார்?

6. இளைஞர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

7. மூலதனம் நூலின் ஆசிரியர் யார்?

8. ‘பொறுமை மிகவும் கசப்பானதுதான்’ ஆனால் அதன் விளைவோ மிகவும் இனிப்பானது - யார் கூற்று?

9. பகல் நேரத்தில் விளக்குடன் வீதியில் திரிந்த தத்துவஞானி யார்?

10. அன்பின் அடையாளமாக ஆசிரியர் யாரைக் குறிப்பிடுகிறார்?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஒவ்வொரு நாளும் உதயத்தைத் தான் தரும் என்பதனை விளக்குக.

(அல்லது)

(ஆ) நீ அசாதாரணமானவன் நூல் கருத்தை விளக்குக.

12. (அ) மனதின் மகத்துவம் பற்றி சர்ச்சில் கூறிய கதை யாது?

(அல்லது)

(ஆ) 'ரெட்டைப்பானை' - நிகழ்வினை விளக்குக.

13. (அ) ஸ்டீபன் ஹாக்கின்ஸ் சந்தோஷம் பற்றிக் கூறியது யாது?

(அல்லது)

(ஆ) நெப்போலியனின் கருணையை விளக்குக.

14. (அ) வைரம் கற்றுத்தரும் வைராக்கியம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) 'கடிகாரம் கட்டும் முன் கவனி' என்ற கட்டுரையில் ஆசிரியர் கூறுவன யாவை?

15. (அ) அனுபவஞானம் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) வறுமையில் கல்வி கற்ற இந்திய ஆளுமைகள் பற்றி எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நீ அசாதாரனமானவன் நூலின் சமூக அக்கறையை விளக்குக.

17. மாற்றுத்திறனாளிகளின் மகத்துவம் பற்றிக் கட்டுரைக்க.

18. நன்னூல் காட்டும் மாணவ சமுதாயம் குறித்து எழுதுக.

19. புத்தகம் தரும் புனிதம் குறித்துக் கட்டுரைக்க.

20. உழைப்பின் உன்னதம் குறித்துக் கட்டுரைக்க.

———————

| F–7816 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA6C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022.**

**Sixth Semester**

**தமிழ்**

**சங்க இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. முல்லைப்பாட்டின் ஆசிரியர் யார்?

2. முல்லைப்பாட்டின் பொருள் யாது?

3. இடைச் சரத்து கண்டோர்கள் கூறும் புலியின் தோற்றத்தைக் கூறுக.

4. முல்லைக் கொடி எதனைப் போன்று பூத்தது?

5. பாலைக்கலி பாடிய புலவர் பெயர்.

6. அகநானூற்றின் முப்பெரும் பிரிவுகளை எழுதுக.

7. ஏழாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

8. சேரமான் செல்வக்கடுங்கோ கபிலருக்கு எவ்வகை உணவினை பரிமாறினான்?

9. மோசிக் கீரனால் போற்றிடப் பாடப்படுபவர் யார்?

10. பரிபாலில் செவ்வேள் பற்றி பாடிய புலவர் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கோவலர் வாழ்க்கையை முல்லைப்பாட்டு எவ்வாறு எடுத்துரைக்கிறது.

(அல்லது)

(ஆ) தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை குறித்து எழுதுக.

12. (அ) “தாமரைத் தண் தாது ஊதி மீமிசைச்

சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்” – இடம்சுட்டி பொருள் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐங்குறு நூற்றின் வேட்கைபத்து பகுதியில் பரத்தையரை விட்டு விலகிவந்த தலைமகனிடம் தோழி கூறியவற்றை எழுதுக.

13. (அ) முல்லைக் கலிகூறும் ஏறுதழுவுதலை விளக்குக.

(அல்லது)

(ஆ) வினைமுற்றிய தலைமகன் தன் தேர்ப்பாகனுக்கு அறிவுறுத்திய செய்திகளைக் கூறுக.

14. (அ) செல்வக் கடுங்கோ வாழியாதனின் கொடைச் சிறப்பினை தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) “பிறர் மனைப் புகுவர் கொல்லே

எளியதானே பூவிலைப் பெண்ட்” – இடம் சுட்டி விளக்குக.

15. (அ) முருகப்பெருமானின் பிறப்பு குறித்த பரிபாடற் கருத்தினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) வைகையின் புதுப்புனல் பெருக்கத்தை எடுத்தியம்புக.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் தருக.

16. முல்லைப்பாட்டில் இடம்பெறும் தலைவன் தலைவியின் மனநிலையை விவரி.

17. சங்ககால அகவாழ்க்கையை நும்நற்றிணைப்பாடல்வழி கட்டுரைக்க.

18. மாலை நேரத்தின் மீது கொடை கோபத்தினை தலைவி வெளிப்படுத்தும் பாங்கினை விவரி.

19. செல்வக்கடுங்கோ வாழியாதனின் வீரம், கொடை ஆகியவற்றை தொகுத்துரைக்க.

20. வையையில் காதல்பரத்தையும் தலைமகனும் புதுப்புனலாகும் விதத்தினை கட்டுரை வரைக.

———————

| F–7817 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA6C2 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Sixth Semester**

**தமிழ்**

**அணி இலக்கணம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　(10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. முத்தகம் என்றால் என்ன?

2. கௌட நெறி என்பது யாது?

3. "எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும் சொன்முறைத் தொடுப்பது" - எவ்வகை அணி?

4. உருவக அணி என்றால் என்ன?

5. உவமை அணியின் வகைகள் மொத்தம் எத்தனை?

6. அநியம உவமை என்றால் என்ன?

7. நிரனிறையணிக்குச் சான்று தருக.

8. சுவையணி என்றால் என்ன?

9. பழிப்பதுபோலும் புகழ்வது எவ்வகை அணி?

10. உதாத்த அணி என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) பெருங்காப்பிய இலக்கணத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) செய்யுள் நெறி பற்றி விளக்குக.

12. (அ) தீவக அணியின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

13. (அ) உவமை அணியின் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'தொகையுவமை', 'இதரவிதர உவமை' - விளக்குக.

14. (அ) பின்வருநிலையணி குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) 'வேற்றுப்பொருள் வைப்பணி' - விளக்குக.

15. (அ) விசேட அணி குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பரிவர்த்தனை அணியைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. செய்யுளின் வகைகள் பற்றி விவரிக்க.

17. தன்மையணி குறித்து விவரிக்க.

18. உவமையணியின் வகைகள் குறித்துக் தொகுத்து விவரிக்க.

19. ஒட்டணி, நுட்பஅணி - விவரிக்க.

20. மாறுபாடு புகழ்நிலையணி, புகழாப் புகழ்ச்சியணி - வேறுபடுத்தி விவரிக்க.

———————

| F–7818 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA6C3 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Sixth Semester**

**தமிழ்**

**இலக்கியத் திறனாய்வு**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. இரசனை முறைத் திறனாய்வின் முன்னோடி யார்?

2. 'Critic' என்ற சொல்லை இலக்கியத்தோடு தொடர்புபடுத்திப் பேசியவர் யார்?

3. இலக்கியத்தைச் சமுதாயத்தின் உற்பத்தி என்று கூறியவர் யார்?

4. ஓடிபஸ் என்றால் என்ன?

5. உருவவியல் திறனாய்வுக்குக் களமாக இருந்த சிந்தனைகள் யாவை?

6. அமைப்பியல் உருக்கொண்ட நாடு, நகர் யாது?

7. மார்க்சிய சித்தாந்தத்தின் அடிப்படைகளாகக் கருதப்படுபவை எவை?

8. தொல்படிமவியல் அணுகுமுறை எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

9. பெண்ணிய எழுத்தாளர் இருவரின் பெயரைக் குறிப்பிடுக.

10. திறனாய்வுக்கு அடித்தளமிட்ட பழந்தமிழ் இலக்கண நூல் எது?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஒரு பக்க அளவில்</u> விடையளிக்க.

11. (அ) திறனாய்வு என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) திறனாய்வாளனின் தகுதிகள் யாவை?

12. (அ) 'மொழியியல் அணுகுமுறை' – விளக்குக.

(அல்லது)

(ஆ) சமுதாயவியல் திறனாய்வு பற்றி எழுதுக.

13. (அ) உருவவியல் திறனாய்வு குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) அமைப்பியல் திறனாய்வு பற்றி விளக்குக.

14. (அ) தொல்படிமவியல் அணுகுமுறை குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) அறநெறி அணுகுமுறையைச் சான்றுடன் விளக்குக.

15. (அ) தலித்தியம் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) பெண்ணியத் திறனாய்வு குறித்தெழுதுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை எழுதுக.

16. ‘திறனாய்வில் அறிவியல் வழி அணுகுமுறை’ – விவரிக்க.

17. உளவியல் அணுகுமுறை குறித்து விவரிக்க.

18. பின் நவீனத்துவம் குறித்துத் தொகுத்தெழுதுக.

19. மார்க்சியத் திறனாய்வு பற்றி விவரிக்க.

20. தமிழில் திறனாய்வு வரலாறு குறித்து விவரிக்க.

———————

| F–7819 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTAE3A |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Sixth Semester**

தமிழ்

விருப்பப்பாடம் : சிந்தனையியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. 'நோக்கு' என்ற சொல்லின் பொருள் யாது?

2. ஒப்புரவுச் செல்வர்களாக வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?

3. திருக்குறளை எத்தகைய கண்காட்சிச் சாலையாக வ.சுப. மாணிக்கம் உருவகிக்கிறார்?

4. வள்ளுவர் கல்வியை எங்ஙனம் கசடறக் கற்க வேண்டும் என வற்புறுத்கிறார்?

5. அல்லல்பட்டு அழுவாரின் கண்ணீர் எத்தகைய வலிமை வாய்ந்தது?

6. 'உறு பசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு' - விளக்கம் தருக.

7. குடும்பம் என்ற சொல்லுக்கு வரையறை தருக.

8. முறை செய்து காப்பாற்றும் மன்னவனை மக்கள் இறை' என்றழைக்கக் காரணம் என்ன?

9. சினத்தின் இயல்பு யாது? (கோபம்)

10. நாவைக் காக்கவில்லை என்றால் ஏற்படும் தீயவிளைவு யாது?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) 'இவன் மகனே தோழி'-என்ற தொடருக்கு வ.சுப. மாணிக்கம் தரும் விளக்கம் யாது?

(அல்லது)

(ஆ) வள்ளுவர் சுட்டும் சாதி, மதம், நாடு பற்றிய பொதுமைக் கருத்துக்களைச் சுட்டுக.

12. (அ) அறவழிப் பொருளீட்டலின் அவசியத்தை வள்ளுவர் எங்ஙனம் வற்புறுத்துகிறார்?

(அல்லது)

(ஆ) 'மனமாசிற்குக் காரணம் பொருட்பற்றே' என்ற கூற்றை வள்ளுவம் வழி ஆராய்க.

13. (அ) 'வறுமையில் செம்மை' நெறி குறித்து வள்ளுவம் கூறும் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) பசியாற்றலின் அவசியத்தை வள்ளுவர் எங்ஙனம் எடுத்துரைக்கிறார்?

14. (அ) குடும்ப வாழ்க்கையில் தலைவனின் பங்கு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) அரசாட்சியில் அமைச்சனின் பங்களிப்பை விவரி.

15. (அ) ஒழுக்கத்தின் இன்றியமையாமை பற்றி வள்ளுவம் எடுத்துரைக்கும் முறையை விவரி.

(அல்லது)

(ஆ) திருவள்ளுவர் தம் கடவுப் கொள்கை யாது?

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. ‘பல்நிலை அறம் பொதித்தது திருக்குறள்’ எனும் கூற்றை வ.சுப. மாணிக்கனார் வழி எடுத்துரைக்க.

17. ‘பொருள்நிலை’ குறித்து வள்ளுவர் தரும் வழிமுறைகளைக் கட்டுரைக்க.

18. ‘அறிவுப் பறிப்பு’ குறித்து வள்ளுவர் உரைக்கும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

19. குடும்ப வாழ்க்கையின் இன்றியமையாமையை வள்ளுவம் எடுத்துரைக்கும் பாங்கினை விவரி.

20. வள்ளுவர் திருக்குறளில் மேற்கொண்டுள்ள நடை குறித்து விளக்குக.

———————

| F– 7820 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTAE3B |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2022**

**Sixth Semester**

**தமிழ்**

விருப்பப்பாடம் : சுற்றுலாவியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. சுற்றுலாப்பயணி - சிறு குறிப்பு வரைக.
2. சுற்றுலாவின் பயன்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
3. விடுமுறை இல்லம் என்றால் என்ன?
4. சுற்றுலாப் பயணியின் திட்டமிடல் பற்றிக் கூறுக.
5. கல்விச்சுற்றுலா- விளக்கம் தருக.
6. உலக விடுதிக் கழகம் பற்றி எழுதுக.
7. உலக நாடுகளிலுள்ள சுற்றுலாத்தலங்கள் இரண்டினைக் கூறுக.
8. எல்லோராக் குகை அமைப்பினை எழுதுக.
9. சுற்றுலாத்துறை சேவைத்துறை என்பதை விளக்குக.
10. அந்நியச் செலாவணி என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) உள்நாட்டுச் சுற்றுலாவின் பிரிவுகள் யாவை?

(அல்லது)

(ஆ) குழுச் சுற்றுலா பற்றி குறிப்பு வரைக.

12. (அ) பயணங்களும் மருத்துவமும் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) பயணத்தால் முளைத்த நாடுகள் யாவை?

13. (அ) தொகுப்புச் சுற்றுலாக்களை வரிசைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) மாநில அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படும் விழாக்கள் யாவை?

14. (அ) பிரேசில் மற்றும் பல்கேரியாவில் சுற்றிப் பார்க்க வேண்டிய தலங்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தாஜ்மகால் மற்றும் மாமல்லபுரக் கடற்கரை கோயில் சிற்பங்கள் குகைகள் பற்றி விளக்குக.

15. (அ) தமிழ்நாட்டிலுள்ள வைணவத் திருத்தலங்களைக் குறிப்பிட்டு விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) தமிழ்நாட்டில் சுற்றுலாவிற்கு பயன்படும் போக்குவரத்துக்கழகம் பற்றி குறிப்பு வரைக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

16. சுற்றுலாவின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை வரைக.

17. சுற்றுலாப் பயணிகள் அறிந்து கொள்ள வேண்டியவற்றை தொகுத்துரைக்க.

18. சுற்றுலா வளர்ச்சியில் தனியாரின் பங்களிப்பினை விவரி.

19. விலங்குகள் சரணாலயங்களின் செயல்பாட்டினை விளக்குக.

20. சுற்றுலாவினால் பெறப்படும் வேலைவாய்ப்புகள் குறித்து விரிவாக எழுதுக.

———————